


**17. 08. 2025**

தலைப்பு செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 2 தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை சற்றுமுன் தொடங்கிவைத்தார்.

2. தமிழகத்தில் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றிவருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறினார்.

3. விவசாயிகளுக்கு விண்ணப்பித்த அன்றே பயிர்கடன் வழங்கும் திட்டம் நாட்டிலேயே முதல் முறையாக தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

4. தமிழக மாணாக்கர், உயர்கல்வியில் தேசிய அளவில், பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாக அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி கூறினார்.

5. அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிபோட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரித்விக் போலிப்பள்ளி இணை - அமெரிக்க இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் 11 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 2 தேசிய நெடுஞ்சாலை திட்டங்களை சற்றுமுன் தொடங்கி வைத்தார்.

புதுதில்லியின் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் நீல மற்றும் மஞ்சள் வழிதடங்களில் துவாரகா விரைவுச்சாலையின் டெல்லி பிரிவு விரிவாக்க பணிகள் இதில் அடங்கும்.

இத்திட்டத்தால் டெல்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் மற்றும் பயண நேரம் வெகுவாக குறையும்.

முன்னதாக சாலை விரிவாக்க பணிகளை மேற்கொண்ட கட்டுமான தொழிலாளர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

***********

ஜெய்சங்கர்

இந்திய – சீன எல்லை விவகாரங்கள் குறித்த சிறப்பு பிரதிநிதிகள் நிலையிலான 24–வது சுற்று பேச்சுவார்த்தைகள் புதுதில்லியில் நாளை நடைபெறுகின்றன.

இதில் பங்கேற்கும் சீன வெளியுறவு அமைச்சர் Wang Yi-உடன் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இருநாடுகளுக்கிடையிலான எல்லை விவகாரங்கள் தொடர்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் சீன அமைச்சருடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

***********

பிரதாப் ராவ் ஜாதவ்

ஆயுர்வேதத்தின் மூலம் குழந்தைகள் மருத்துவம் தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கு புதுதில்லியில் நாளை தொடங்குகிறது.

குழந்தை நல பராமரிப்பு மற்றும் நோய் மேலாண்மையில் ஆயுர்வேத அணுகுமுறை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படும் என மத்திய ஆயுஷ் அமைச்சர் திரு.பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

***********

**எல்.முருகன்**

தமிழகத்தில் 10 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றிவருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக ரயில்வே திட்டங்களுக்கு மட்டும் நடப்பாண்டில் 6 ஆயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் தமிழக ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதுடன் 33 ஆயிரத்து 476 கோடி ரூபாய் செலவில் இரட்டை ரயில்பாதை உள்ளிட்ட புதிய ரயில்பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்றுவருவதாகவும் எடுத்துரைத்தார்.

பயணிகளின் கோரிக்கைகளை ஏற்று 38 ரயில்நிலையங்களில் நாளை முதல் பல்வேறு ரயில்கள் நின்று செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

***********

**விக்ரம் மிஸ்ரி**

மத்திய வெளியுறவு செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி நேபாள வெளியுறவு செயலர் திரு.அம்ருத் பஹாதூர் ராயுடன் இன்று முக்கிய ஆலோசனை மேற்கொள்கிறார்.

இரு நாடுகளுக்கிடையே மக்கள் தொடர்பு, வளர்ச்சி, ஒத்துழைப்பை அதிகரிப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இதில் ஆலோசிக்கப்படும்.

***********

குடியரசு துணை தலைவர் தேர்தல்

குடியரசு துணை தலைவர் தேர்தலில் போட்டியிடும் பிஜேபி வேட்பாளரை இறுதி செய்வதற்கான பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

பிரதமரும், கட்சியின் மூத்த தலைவருமான திரு.நரேந்திரமோடி மற்றும் கட்சியின் தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டாவிற்கு வேட்பாளரை இறுதி செய்வதற்கான அதிகாரம் ஒருமனதாக வழங்கப்பட்ட நிலையில் இன்றைய கூட்டத்தில் பிஜேபி வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படும் என தெரிகிறது.

குடியரசு துணை தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 9ஆம் தேதி நடைபெறும் நிலையில் வேட்புமனுக்களை வரும் வியாழக்கிழமை வரை தாக்கல் செய்யலாம்.

***********

நுகர்வோர் குறைதீர் தீர்வாயம்

நாட்டில் தமிழகம் கேரளா உட்பட 10 மாநிலங்களில் நுகர்வோர் குறைகள் தொடர்பான வழக்குகளுக்கு முழுமையான தீர்வு காணப்பட்டுள்ளதாக தேசிய நுகர்வோர் குறைதீர் தீர்வாயம் தெரிவித்துள்ளது.

இணையவழி வர்த்தகத்தில் குறைபாடுகள் தொடர்பான இம்மாநிலங்கள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் மத்திய அரசின் இ-ஜாக்ரிதி மின்னணு குறைதீர் மையத்தில் புகார்கள் பதிவு செய்த நிலையில் இவற்றிற்கு முழுமையான தீர்வு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தாண்டு மட்டும் இதுவரை 85 ஆயிரத்து 531 புகார்கள் பதிவானது குறிப்பிடத்தக்கது.

***********

முதலமைச்சர்

நாட்டிலேயே முதல் முறையாக விவசாயிகளுக்கு இணையதளத்தில் விண்ணப்பித்த அன்றே பயிர்கடன் வழங்கும் திட்டம் தமிழகத்தில் தொடங்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தர்மபுரியில் அதியமான் கோட்டை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் இத்திட்டத்தை இன்று தொடங்கிவைத்த அவர், தடங்கம் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில் 512 கோடி ரூபாய் மதிப்பிலான, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 363 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், திமுக அரசின் மக்கள் நல திட்டங்களை, பிற மாநிலங்களும் செயல்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் பேருந்து வசதி இல்லாத 8 கிராமங்களுக்கு பேருந்து சேவையை தொடங்கிவைத்த முதலமைச்சர் தர்மபுரி ஒகேனக்கல் இடையே ஆட்டுக்காரன்பட்டி – பென்னாகரம் தேசிய நெடுஞ்சாலை நான்குவழி சாலையாக மேம்படுத்தப்படும்,

இம்மாவட்டத்தின் புளி உற்பத்தியை கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த புளி வணிக மையம் அமைக்கப்படும் உள்ளிட்ட 5 அறிவிப்புகளையும் வெளியிட்டார்.

வாய்ஸ்

மாநிலத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 10 லட்சம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார்.

***********

ரகுபதி

தமிழகம் கல்வித்துறையில் நாட்டிலேயே முன்னனி மாநிலமாக விளங்குவதாக மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கல்வி வளர்ச்சிக்கான அரசின் திட்டங்களால், தமிழக மாணாக்கர், உயர்கல்வியில் தேசிய அளவில், பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாக கூறினார்.

***********

கோவை

கோவை மாவட்டத்தை ஒட்டிய மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தொடர் கன மழை காரணமாக கோவை குற்றாலம், சூழல் சுற்றுலா தலம் இன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

இதனிடையே பொள்ளாச்சியை அடுத்த ஆழியாறு அணையில் இருந்து வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

120 அடி கொள்ளளவு கொண்ட அணையின் நீர்மட்டம் தற்போது 119 அடியை எட்டியுள்ளது.

***********

இருவரி

வேலூர் மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் விநாயகர் சிலைகளை தயாரிக்குமாறு என்று ஆட்சித்தலைவர் திருமதி சுப்புலெட்சுமி கேட்டுக்கொண்டார்.

அரியலூர் காஞ்சிபுரம் மாவட்டங்களில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 20ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

**விழுப்புரம் மாவட்டத்தில் திருநங்கைகள்** அரசின் நல திட்ட உதவிகளை முறையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தினகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**தஞ்சை மாவட்டம் கல்லணையின் வரலாற்று** சிறப்பை பிரதிபலிக்கும் நிரந்தர அஞ்சல் முத்திரையை மத்திய மண்டல அஞ்சல் துறை தலைவர் திருமதி நிர்மலாதேவி, தோகூர் துணை அஞ்சலகத்தில் வெளியிட்டார்.

**தூத்துக்குடியில்** மாவட்ட அரசு இசை பள்ளி மாணவர் சேர்க்கைக்கான விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் இன்று நடைபெற்றன.

குரலிசை, நாதஸ்வரம், பரதம், உள்ளிட்டவற்றிற்கு 3 வருட சான்றிதழ் படிப்பு வழங்கப்படுகிறது.

**திருவாரூர் மாவட்டம் எடமேலையூரில்** தன்னார்வ அமைப்பு சார்பில் மியாவாக்கி குறுங்காடுகள் அமைப்பதற்காக 2 ஆயிரம் மரக்கன்றுகள் இன்று நடவு செய்யப்பட்டன.

**ஈரோடு ரயில் நிலையத்தில் தடை** செய்யப்பட்ட 35 கிலோ போதை பொருட்களை கொண்டு வந்த ஒடிஷா மாநிலத்தை சேர்ந்த 5 பேரை ரயில்வே காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் உள்ளிட்ட பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

***********

**கோவில்**

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் நாகராஜர் திருக்கோவிலில் ஆவணி முதல் ஞாயிறு சிறப்பு வழிபாடுகள் இன்று விமரிசையாக நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

ரயில்

திருச்சி - தாம்பரம் இடையே முன்பதிவில்லா மெமு விரைவு சிறப்பு ரயில் இன்று இரவு இயக்கப்படுகிறது.

திருச்சியிலிருந்து இரவு 10.50க்கு புறப்படும் இந்த ரயில், தஞ்சை, மயிலாடுதுறை, கடலூர், விழுப்புரம் வழியாக நாளைகாலை 6.10க்கும் தாம்பரம் சென்றடையும்.

***********

**சுற்றுலா பயணிகள்**

தொடர் விடுமுறையை ஒட்டி ராமேஸ்வரத்திற்கு சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

ராமேஸ்வரம் படகுகுழாம், தனுஷ்கோடி அரிச்சல்முனை, உள்ளிட்ட சுற்றுலா தலங்களிலும், ராமேஸ்வரம் அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோவிலிலும் ஏராளமானோர் வந்துசெல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**வானிலை**

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக நீலகிரி கோவை மாவட்ட மலை பகுதிகளில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வடமேற்கு வங்ககடலை ஒட்டிய மத்திய மேற்கு கடற்பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளதாகவும், இது மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் எனவும் இம்மையம் கூறியுள்ளது.

***********

**டென்னிஸ்**

அமெரிக்காவில் நடைபெறும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதிபோட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி, ரித்விக் போலிப்பள்ளி இணை - அமெரிக்க இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********

துரந்த்கோப்பை

கொல்கத்தாவில் நடைபெறும் துரந்த்கோப்பை கால்பந்து காலிறுதி ஆட்டத்தில் இன்று மோகன் பகான் - ஈஸ்ட் பெங்காள் அணிகள் மோதுகின்றன.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது